**அரசுத் தேர்வுகள் இயக்ககம்– சென்னை–6.**

**மேனிலைத்தேர்வு (இரண்டாமாண்டு) மார்ச்சு –2018.**

**பகுதி –1**

**<u>தமிழ் முதல் தாள் விடைக்குறிப்பு</u>**

**<u>விடைத்தாள் திருத்தும்போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.</u>**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்தல் வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, இலக்கணப் பிழையின்றி இருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, இலக்கணப் பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும்.
4. தவறான விடைகளை ( X) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப் பிழைகளை ( ^ ) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்குகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே ( √ ) குறியிடுதல் வேண்டும்.
6. மிகையான விடையிருப்பின் 'மிகை' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் 'மீண்டும்' என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

| I | எவையேனும் நான்கிற்கு மட்டும் | 4X2=8 |
|---|---|---|
| 1. | **<u>அகநானூற்றுப் பாடல்களின் திணை அமைப்பு முறை</u>**<br>1. 1,3,5,7,9 என வருவன – பாலைத் திணை<br>2. 2,8 என வருவன – குறிஞ்சித் திணை<br>3. 4,14 என வருவன – முல்லைத் திணை<br>4. 6,16 என வருவன – மருதத் திணை<br>5. 10,20 என வருவன – நெய்தல் திணை | 2 |
| 2. | **ஒறுத்தார்**<br>தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டித்தவர்க்கு ஒருநாள் மட்டுமே இன்பம்.<br>**பொறுத்தார்**<br>தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிக்காமல் பொறுத்தவர்க்கு இவ்வுலகம் அழியும் வரையிலும் புகழ். | 1<br><br><br>1 |

| | | |
|---|---|---|
| 3. | **வீரமாமுனிவரின் இலக்கியப் பங்களிப்பு**<br>1. சிற்றிலக்கியங்கள்<br>2. உரைநடை<br>3. அகராதி<br>4. மொழிபெயர்ப்பு<br>5. இலக்கணம்<br>6. பெருங்காப்பியம்<br>(இவற்றுள் ஏதேனும் நான்கு) | 2 |
| 4 | **அந்தாதி**<br>1. அந்தம்+ஆதி = அந்தாதி<br>2. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ,அடியோ அடுத்து வரும் பாடலின் முதலாய் அமைவது | 1<br>1 |
| 5. | **சிறுவர்களுக்குத் தட்டாம் பூச்சி பிடிக்க நேரமில்லாதது – ஏன்?**<br>1. உணவுக்காக அலையும் குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தட்டாம்பூச்சி பிடிக்க நேரமில்லை. | 2 |
| 6 | **உமறுப்புலவருக்கு உதவிய வள்ளல்கள்**<br>1. சீதக்காதி<br>2. அபுல்காசிம் | 1<br>1 |
| II | **எவையேனும் மூன்றிற்கு மட்டும்** | 3x4=12 |
| 7. | 1. இந்திய நாடு என்னுடைய நாடென்று நாள்தோறும் பாடுதல் வேண்டும்.<br>2. இந்தியர் விழிப்புணர்வின்றி இருந்ததால் அந்நியர் நம்மை ஆள நேர்ந்தது.<br>3. நம் வாழ்வு மலர பிறரை நம்பி வாழ்ந்த காலங்கள் மறைந்தன.<br>4. இன்று முதல் இந்திய நாடு என்னுடைய நாடு என்று எண்ணுதல் வேண்டும். | 1<br>1<br>1<br>1 |
| 8. | **குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே**<br>**இடம்:** குறுந்தொகை, குறிஞ்சித் திணை– கபிலர் பாடலில் தலைவி தோழியிடம் கூறியது.<br>**பொருள்:**<br>களவுக் காலத்தில் தலைவர் என்னை மணந்த போது சான்றாக அங்கே ஒரு குருகும் இருந்தது.<br>**விளக்கம்:**<br>• தலைவன் என்னைக் களவில் மணந்தபோது சான்றாய் இருந்தது குருகு மட்டுமே<br>• அது தன் இரையாகிய ஆரல் மீனைத் தேடிக் கொண்டிருந்தது<br>தலைவனின் சூளுரை பொய்யாகும்படி நடந்தால், நான் என்ன செய்வேன் ? | 1<br>1<br>2 |
| 9. | **வினைத்திட்பத்தின் சிறப்பு**<br>1. சிறந்த மனவுறுதி கொண்டு உயர்ந்தவராகிய அமைச்சரின் செயலாற்றல் அனைவராலும் நன்கு மதிக்கப்படும்<br>**பயன்**<br>2. ஒரு செயலை எண்ணியவர் செயலின் உறுதி கொண்டவராக இருந்தால் அவர் நினைத்த செயலை நினைத்தபடியே செய்து முடிப்பர். | 2<br>2 |
| 10. | **மனந்தளர்ந்த சீதை செய்யத் துணிந்த செயல்**<br>1. இராவணன் தன்னை மணமுடிக்குமாறு பலவாறு கூறவே சீதை கடுஞ்சொற்களைக் கூறினாள்.<br>2. அதனால், கடுங்கோபம் அடைந்த இராவணன் சீதையைக் கொன்றுவிடப் போவதாக அச்சுறுத்தினான்.<br>3. அனுமன் தன் மந்திர சக்தியால் அரக்கிமார்களை உறங்கச் செய்தான்.<br>4. அப்போது சீதை தன் மணிக்கழுத்தில் சுருக்கிட்டு உயிர்விடத் துணிந்தாள். | 2 |

| | | |
|---|---|---|
| | **அனுமன் செய்கை**<br>1. அந்நேரத்தில் அனுமன் அவள் திருவடி வணங்கி இராம நாமத்தை உச்சரித்தான்<br>2. இராமன் அடையாளமாகத் தந்தனுப்பிய கணையாழியைக் கொடுத்தான். | 2 |
| 11. | **ஊரவர் திகைத்துக் கூறியன:**<br>1. நீக்க முடியாத துன்பம் செய்து, வளையாத செங்கோல் வளைந்தது.<br>2. அரசர்க்கு அரசனான பாண்டியனது அரசியல் அழிவுற்றது.<br>3. குளிர்ந்த குடையானது இன்று வெம்மையைத் தந்தது.<br>4. செம்பொன்னாலாகிய சிலம்பைக் கையில் ஏந்தி, நம் பொருட்டுப் புதிய பெருந்தெய்வம் வந்தது.<br>5. இவள் தெய்வத்தன்மை உடையவள் போல் உள்ளாள். இனி விளைவது யாதோ ? | 2<br><br><br><br><br>2 |
| III | **எவையேனும் மூன்றிற்கு மட்டும்** | 3x4=12 |
| 12. | **தென்கரை நாட்டின் வளம்:**<br>1. தென்கரை நாட்டில் வெயில் காயும்–மக்களின் வயிறு காயாது.<br>2. தயிர்க்கண்டங்கள் மட்டுமே கலங்கும்–மக்கள் மனம் கலங்கார்.<br>3. நாழிகையும் வாரமுமே மாயும்–மக்கள் பசியால் மாயார்.<br>4. வெள்ளம் மட்டுமே மறுகி ஓடும்–மக்கள் மறுகி வாடார்.<br>5. முற்றிய செந்நெல் தலைசாயும்–மக்கள் எதற்காகவும் தலை குனிய மாட்டார்.<br>6. முனிவர் மட்டுமே தனித்து இருப்பர்–கணவன் மனைவியாக வாழ்பவர் தனித்திருக்க மாட்டார்.<br>7. சந்தனக் கட்டைகள் மட்டுமே தேயும்–பெண்கள் தூது உரைத்துத் தேய்வதில்லை (அல்லது) செய்யுளில் பொருள் தேய்வதில்லை. | 4 |
| 13. | **பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன:**<br>1. பெருமாளாகிய திருமால் எழுந்தருளி வாழ்கின்ற மலை திருவேங்கடம்.<br>2. சிவபெருமானும், நான்முகனும், இந்திரனும், முனிவர்களும், தேவர்களும், காலையும், மாலையும் தம் அறிவில் வைத்துப் போற்றும் மலை.<br>3. எல்லாப் பொருள்களாகவும், எல்லா உயிர்களின் தோற்றத்துக்குக் காரணமாகவும்,தாய்தந்தையாகவும், ஆதிப்பெருந்தெய்வமாகவும் விளங்கும் பெருமாள் எழுந்தருளிய மலையுமாகும். | 4 |
| 14. | **பாரதிதாசன் கூறுவன**<br>1. மனிதர்கள் அன்பு நெறியில் வாழ்வதற்கு<br>2. மனோபாவம் வானைப்போல் விரிவதற்கு<br>3. தனி மனிதத் தத்துவம் என்னும் இருள் மறைவதற்கு<br>4. எல்லா மக்களையும் சமமாகக் கருதுவதற்கு<br>5. மனிதவாழ்வு புனிதவாழ்வாக மாறுவதற்கு நாடெங்கும் புத்தகசாலை வேண்டும் என்கிறார் பாரதிதாசன். | 4 |
| 15. | **சிக்கனத்தால் வரும் பயன்கள்**<br>1. பெரியாரைப் போல் சிக்கனமாக வாழ்ந்தால் சீரோடும் சிறப்போடும் விளங்கலாம்.<br>2. நீருற்றைப் போல தொடர்ந்து பயனளிக்கும்<br>3. துன்பமெல்லாம் பாறாங்கல் மீது விழும் மழை நீரைப் போல உடனே சிதறி ஓடும்<br>4. சிக்கனம் தான் ஒருவருக்குச் சிறந்த சொத்தாகும். | 1<br>1<br>1<br>1 |
| 16. | **சிலுவையில் பரித்தியாகம் செய்த பெருமான்**<br>1. இயேசு, கன்னித்தன்மை அழியாத மரியாளின் மகனாய்த் தோன்றினார்<br>2. மக்கள் வீடுபேறு அடையும் பொருட்டுத் தம் உயிரைப் பலியாய்ச் சிலுவையில் கொடுத்தார்<br>3. அத்தகைய வழிபடு கடவுளை இருகைகளையும் கூப்பித் தொழுவோம். | 4 |

| | | |
|---|---|---|
| | | 1 × 8 = 8 |
| IV | எவையேனும் ஒன்றிற்கு மட்டும். | |
| 17 | **செய்ந்நன்றியறிதல்:**<br>1. செய்யாமல் செய்த உதவிக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் ஈடாகா.<br>2. உரியகாலத்தில் செய்த உதவி, உலகைவிடப் பெரியது.<br>3. பயன் கருதாமல் செய்த உதவியை ஆராய்ந்தால், கடலைவிடப் பெரியது.<br>4. தினையளவு உதவி செய்தாலும் பனையளவு நினைப்பர் நன்றியுடையவர்.<br>5. செய்த உதவியின் அளவு, பெற்றுக் கொண்டவரின் பண்பைப் பொறுத்தது.<br>6. குற்றமற்ற நல்லவர் நட்பை மறக்கக் கூடாது. துன்பத்தில் உதவியவர் நட்பை விட்டு விடக்கூடாது.<br>7. உதவியவர் நட்பை நன்றி உடையார் ஏழுபிறப்புகளிலும் மறவார்.<br>8. பிறர் செய்த தீமையை அன்றே மறந்து விட வேண்டும். நன்மையை மறக்கக் கூடாது.<br>9. கொலைக்கு நிகரான துன்பம் செய்தாலும் அவர் முன்பு செய்த நன்மையை நினைக்க, துன்பம் மறையும்.<br>10. எத்தகைய அறங்களை அழித்தாலும் அப்பாவத்திலிருந்து நீங்க வழியுண்டு. நன்றி மறந்தவருக்கு வழியில்லை. | 8 |
| 18 | **வேலனின் எழுச்சியுரைகள்**<br>1. இந்த அற்ப உடல் உயிர் பிரிந்தால் சிறிதளவும் பயன்படாது.<br>2. தோன்றியவுடன் மறைந்துவிடும் மின்னல் போன்றது.<br>3. உயிர் பிரிந்த பின் நரி, கழுகு முதலியவற்றால் விரும்பித் தின்னப்படுவது.<br>4. அறிவில் சிறந்த பெரியோரின் ஏளனத்திற்கு இலக்கானது.<br>5. நீர்க்குமிழி போன்றது.<br>6. மன்னரின் மகள் அரசாள்வதற்கு உதவவில்லை என்றால் அறிவிற்கு இழிவு வந்துசேரும்.<br>7. என்னைப் பெற்றோருக்கும் இந்நாட்டுக்கும் என்னால் தினையளவு நன்மை கிடைக்குமென்றால் அதற்காக என் உயிரையே இழக்க நேர்ந்தாலும் அந்நாளே எனக்குத் திருநாளாகும்.<br>8. பனையளவு நன்மை வருவதாயினும் தன்னலத்தைக் கருதுபவன் பதருக்குச் சமமாவான்.<br>9. என்னால் உனக்கு ஆகக்கூடிய செயல் ஒன்று உண்டென்றால் அதற்காக என் உயிரையும் தருவேன் என்றான் வேலன். | 8 |
| 19 | **மனிதநேயம்**<br>1. நான் பலமுறை சிந்தித்துப் பார்த்தேன். உலக மக்களின் உள்ளங்களிடையே நல்ல ஒளியில்லை.<br>2. நான் சந்தித்த பலபேர், அறியாமை இருளில் அடங்கி, தலைதாழ்ந்து நிற்பதிலே மகிழ்ச்சி கொள்கின்றனர்.<br>3. எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற எண்ணமில்லாமல் வாழ்கின்றனர்.<br>4. நல்ல நம்பிக்கையோடு வழிகாட்டத் தலைவரின்றி தெருச்சந்தியில் ஆதரவில்லாமல் நிற்கின்றனர்.<br>5. இவர்களுக்கு ஊக்கத்தைத் தந்து வழிகாட்ட வேண்டியது நமது முதன்மையான கடமை என்று கூறுவேன்.<br>6. பழங்காலந் தொட்டுத் தொடர்ந்து வரும் அடிமை எண்ணங்கள் யாவும் தொலைந்து போகட்டும்.<br>7. நம்மை ஆட்டுவிக்கும் ஆதிக்க வெறி நின்று விட்டால், அடிமைப்படும் சிறுமைத்தனம் நீங்கிப் போய்விடும்.<br>8. எரிகின்ற நெருப்பை அணைத்துவிட்டால், ஏற்படப் போகும் கொப்புளங்கள் இல்லை.<br>9. தன் கன்றின் குரலைக் கேட்ட தாய்ப்பசு போல, மற்றவரின் துன்பக்குரலைக் கேட்டவுடன் சென்று அன்பு காட்டி உதவி செய்தால் மனித குலம் வெற்றியடையும்.<br>10. மனிதநேயம் மட்டுமே வேற்றுமையைத் தகர்த்து எறியும். | 8 |

| | | |
|---|---|---|
| V | <u>பாடல் வினா விடை</u> | 4×1 = 4 |
| 20 | "வருவை யாகிய சின்னாள்<br>வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே"<br>(அ) நற்றிணை<br>(ஆ) நக்கண்ணையார்<br>(இ) தோழி கூற்று<br>(ஈ)செல்வாயாக | <br><br>1<br>1<br>1<br>1 |
| 21. | "உட்புக வொண்ணாத் தூய<br>மரகதக் கோட்டை...."<br>(அ) காடு<br>(ஆ) எழிலோவியம்<br>(இ) கவிஞரேறு வாணிதாசன்.<br>(ஈ) பச்சை (பசுமை) | <br><br>1<br>1<br>1<br>1 |
| VI.<br>22 | கம்பராமாயணம்<br>விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்<br>நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்<br>இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்<br>கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன். – கம்பர்<br>பாவகை : அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.<br>(சீர் பிரித்து எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம், பாவகை மட்டும் எழுதியிருப்பின் 2 மதிப்பெண் வழங்கலாம். ) | <br>4<br><br><br><br><br>2 |
| 23. | மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க<br>துன்பத்துள் துப்பாயார் நட்பு.<br><br>அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்<br>உள்ளழிக்க லாகா அரண். | 2+2= 4 |
| VII.<br>24 | பகுபத உறுப்பிலக்கணம் (எவையேனும் இரண்டு மட்டும்) | 2×2 = 4 |
| | பிரித்து எழுதுதல் – 1 மதிப்பெண்<br>குறிப்பு எழுதுதல் – 1 மதிப்பெண் | |
| (அ) | ஓம்புமின் – ஓம்பு +மின்<br>ஓம்பு – பகுதி<br>மின் – ஏவல் பன்மை வினைமுற்று விகுதி | |
| (ஆ) | செய்க – செய் +க<br>செய் – பகுதி<br>க – வியங்கோள் வினைமுற்று விகுதி | |
| (இ) | திறந்த – திற +த்(ந்) + த் +அ<br>திற – பகுதி<br>த் – சந்தி (ந் ஆனது விகாரம்)<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்சு விகுதி | |

| | | |
|---|---|---|
| (ஈ) | வேண்டேன் – வேண்டு +(ஆ)+ ஏன்<br>வேண்டு – பகுதி<br>ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது<br>ஏன் –தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | |
| (உ) | ஒழிந்து – ஒழி +த்(ந்) + த் +உ<br>ஒழி – பகுதி<br>த் – சந்தி (ந் ஆனது விகாரம்)<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | |
| (ஊ) | வாழ்த்துவம் – வாழ்த்து+வ் +அம்<br>வாழ்த்து – பகுதி<br>வ் – எதிர்கால இடைநிலை<br>அம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | |
| 25 | **இலக்கணக்குறிப்பு (எவையேனும் மூன்று மட்டும்)** | **3 ×2 = 6** |
| | அ) புனைகலம் – வினைத்தொகை<br>ஆ) செலீஇய – சொல்லிசை அளபெடை<br>இ) கதுவிடா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>ஈ) கண்ணுதல் – இலக்கணப்போலி / (நுதல்கண்) முன்பின் தொக்க போலி<br>உ) பேரறிவு – பண்புத்தொகை<br>ஊ) அறைந்தறைந்து – அடுக்குத்தொடர் | |
| 26. | **புணர்ச்சி விதி (இரண்டு மட்டும்)**<br>**பிரித்து எழுதுதல் – 1 மதிப்பெண்; விதி கூறல் – 1 மதிப்பெண்** | **2 ×2 = 4** |
| அ) | முதுமரம் – முதுமை + மரம்<br>விதி – 'ஈறுபோதல்' | 1<br>1 |
| ஆ) | பூங்கொடியாள் – பூ + கொடியாள்<br>விதி – 'பூப்பெயர் முன்இன மென்மையுந் தோன்றும்' | 1<br>1 |
| இ) | இற்பிறப்பு – இல் + பிறப்பு<br>விதி – 'லள வேற்றுமையில் வலிவரின் றடவும்' / 'லள வேற்றுமையில் றடவும்' | 1<br>1 |
| ஈ) | உயிருண்டு – உயிர் + உண்டு<br>விதி – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' | 1<br>1 |
| உ) | பெருந்தெய்வம் – பெருமை + தெய்வம்<br>விதி 1 – 'ஈறுபோதல்'<br>விதி 2 – 'இனமிகல்' | 1<br>½<br>½ |
| ஊ) | ஒன்றென்ப – ஒன்று + என்ப<br>விதி 1 – உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்'<br>விதி 2 – 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' | 1<br>½<br>½ |

| | | |
|---|---|---|
| 27. | சான்று தந்து விளக்குக | 1 × 4 = 4 |
| | **முல்லைத் திணை**<br>நிலம் : காடும் காடு சார்ந்த இடமும்<br>பொழுது : சிறுபொழுது – மாலை<br>பெரும்பொழுது – கார்காலம்<br>கருப்பொருள் : எவையேனும் நான்கு எழுதினால் போதுமானது.<br>உரிப்பொருள் : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.<br>சான்று : ''பசைபடு பச்சை . . . '' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல். | 1<br><br><br>1<br>1<br>1 |
| | **(அல்லது)**<br>**பொருண்மொழிக்காஞ்சி**<br>**துறை விளக்கம்** – 'துறவியராகிய மெய்யுணர்ந்தோர் கண்ட பொருள் இதுவென அதன் இயல்பை உணர்த்துவது' பொருண்மொழிக் காஞ்சித்துறை.<br>**சான்று** – ''பல்சான்றீரே பல்சான்றீரே . . . '' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.<br>**விளக்கம்** – நன்மை செய்யவில்லை என்றாலும் தீமை செய்யாதே என்ற மெய்ப்பொருளைக் கூறுவது. | <br><br>2<br><br>1<br><br>1 |
| 28. | இப்பாடலில் அமைந்துள்ள அணி – **உவமையணி**<br>**அணி இலக்கணம்** – உவமை, உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் அமைந்து வருவது உவமையணி.<br>**அணி விளக்கம்**<br>உவமை : பாறாங்கல் மீதில் விழும் மழைநீர்<br>உவமேயம் : பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும்<br>உவம உருபு : போல | 1 × 4 = 4<br>1<br>2<br>1 |
| | **(அல்லது)**<br>**சொற்பொருள் பின்வருநிலையணி**<br>**அணி இலக்கணம்:-** செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருதல்<br>**சான்று:-** " உதவி வரைத்தன் றுதவி உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து"<br>**அணிப்பொருத்தம் :-** 'உதவி என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து (உதவுதல்/ ஈகை/ உபகாரம்) ஒரே பொருளைத் தருதல்<br>**(சான்றிற்குரிய பாடல் பொருத்தமான எப்பாடலாகவும் அமையலாம்)** | <br><br>2<br>1<br><br>1 |
| | **(அல்லது)**<br>**எடுத்துக்காட்டு உவமையணி**<br>**அணி இலக்கணம்** – உவமை, உவமேயம் வெளிப்படையாக வந்து உவம உருபு மறைந்து வருதல்.<br>**சான்று** – இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.<br>**அணி விளக்கம்**<br>உவமை – வறுமையுள் வறுமை விருந்தினரை உபசரிக்க முடியாமை.<br>உவமேயம் – அறிவிலார் செய்யும் தீங்கினைப் பொறுத்தல்.<br>உவம உருபு – மறைந்து வந்துள்ளது.<br>**(சான்றிற்குரிய பாடல் பொருத்தமான எப்பாடலாகவும் அமையலாம்)** | <br><br>2<br>1<br><br><br><br>1 |

| | | |
|---|---|---|
| VII | பொருத்துக. | 4 x 1 = 4 |
| | நூல் — ஆசிரியர்<br>29. இராசராச சோழனுலா – ஒட்டக்கூத்தர்<br>30. திருவேங்கடத்தந்தாதி – பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்<br>31. மதுரைக் கலம்பகம் – குமரகுருபரர்<br>32. திருத்தொண்டத் தொகை – சுந்தரர் | |
| IX | **உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** | 16x1=16 |
| 33. | அ) ஒட்டக்கூத்தர் | |
| 34. | அ) 65 | |
| 35. | ஆ) 13 முதல் 31 அடிவரை | |
| 36. | இ) 38 | |
| 37. | இ) அடையடுத்த ஆகுபெயர் | |
| 38. | ஆ) கவுந்தியடிகள் | |
| 39. | இ) அனுமன் | |
| 40. | அ) சூசைமாமுனிவர் | |
| 41. | இ) கலம்பகம் | |
| 42. | ஆ) இன்னோசை | |
| 43. | இ) தமிழன்னை விருது | |
| 44. | இ) பாரதியார் | |
| 45. | ஆ) சுரதா | |
| 46. | அ) பனு அகமது மரைக்காயர் | |
| 47. | அ) கோப்பெரு நற்கிள்ளி | |
| 48. | அ) சுந்தரர் | |
| X | **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக** | 2 + 2 = |
| 49. | உதவி, கடலின். | |
| 50. | எண்ணியார், பெறின். | |